உ

# அருள் ஒளி



வெளியீடு


ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

123

தெல்லிப்பழை, இலங்கை

2017

# தவத்திரு யோகசுவாமிகள்



## நற்சிந்தனை

மன்னுயிரெல்லாம் மகிழ்ந்திடல் இன்பம்
என்னுயிர் போலவை ஓம்பிடல் இன்பம்
இன்னுயி ரிவையெலா மிறைவன் வடிவென
உன்னிடும் மெய்யுணர் வுற்றிட லின்பமே.



# அருள் ஒளி

## ( மாதாந்த சஞ்சிகை )

ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

சித்திரை மாத மலர்

2017

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல.: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019-3

## பாடசாலைகளை மூடாமல் பாதுகாக்க வேண்டும்

யாழ். குடாநாட்டில் கல்வித் திணைக்களத்தால் மாணவர் குறைந்த பாடசாலைகளை மூடும் படலம் தொடர்ந்துகொண்டிருக்கிறது. இது வேதனை தரும் செய்தியாகும். கடந்த வருடம் 75 மாணவர்களுக்கு உட்பட்ட பாடசாலைகளை மூடவேண்டுமென கல்வியமைச்சு உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவை அவசரமாக வடமாகாணத்தில் சிலர் நிறைவு செய்து வருகிறார்கள். தீவகத்திலும் தென்மராட்சி வலயத்திலும் இத்திட்டத்தின் கீழ் சுமார் 14 பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டது. மேலும் சில பாடசாலைகள் மூடும் பட்டியலில் உள்ளதாக அறிகிறோம். சைவவித்தியாவிருத்திச் சங்கம் இலங்கையில் சைவப் பாடசாலை நிறுவுவதில் மிகுந்த அக்கறை கொண்டு உழைத்தது. இச் சங்கத்தின் தலைவராக விளங்கிய இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் காலத்தில் 150இற்கு மேற்பட்ட பாடசாலைகள் திறந்து வைக்கப்பட்டது. இந்து போர்ட் ஆரம்பிக்கப்பட்ட சில பாடசாலைகள் இன்று தேசிய பாடசாலைகளாக மிளிர்வதைக் காணலாம்.

கிராமம் தோறும் எம் முன்னோர்கள் தமது சொத்து நிலத்தைக் கொடுத்து பாடசாலைகளை உருவாக்கினர். இன்று பலர் புலம்பெயர்ந்து தென்னிலங்கையிலும் வேறு நாடுகளிலும் வாழ்வதால் கிராமத்து மக்கள் தொகை என்றுமில்லாதவாறு வீழ்ச்சியடைந்து வருகிறது. கிராமத்தில்

உள்ளவர்களும் நகர்ப்புற பாடசாலைகளில் தமது பிள்ளைகளை சேர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டுவதால் கிராமத்துப் பாடசாலையில் மாணவர் தொகை மிகவும் குறைவடைந்து வருகிறது. இந்நிலையில் 75 மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பாடசாலைகளை மூடுவது என்ற கொள்கையின் அடிப்படையில் பல அறிஞர்களை உருவாக்கிய கிராமத்துப் பாடசாலைகளை மூடுவது கவலைக்குரிய செய்தியாகும். இந்நிலையில் மூடப்பட்ட பாடசாலைகளின் அசையாச் சொத்துக்கள் 1961ம் ஆண்டு பாடசாலைகள் தேசிய மயமாக்கல் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயத்தின்படி இவ்விடயம் கருத்தில் கொள்ளவேண்டும். குறிப்பிட்ட பாடசாலையொன்றை மூடும் பட்சத்தில் பாடசாலையின் நிலம் கட்டடம் ஸ்தாபகர்களுக்கே உரித்துடையதென்ற ஒப்பந்தத்தை இன்று யாரும் விளங்கிக்கெள்வதாக இல்லை. சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு பாடசாலை மூடப்படும்போது அச்சொத்துக்கள் சைவவித்தியாவிருத்திச் சங்கத்திற்கே மீண்டும் வழங்கப்படவேண்டும். பாடசாலை கட்டிடத்தை வேறு திணைக்களங்களுக்கோ வேறு செயற்பாட்டிற்கோ வழங்கும் உரிமை அரசுக்கு இல்லை. இவ்விடயம் தொடர்பாக அனைவரும் விழிப்பாக இருக்கவேண்டும். பாடசாலைகள் மூடப்படுவதைத் தடுப்பதற்கு சகலரும் ஆவன செய்தல் வேண்டும். கிராமத்து பாடசாலைகளை மாணவர்கள் நாடக்கூடியதாக சில நல்ல செயற்றிட்டங்களை உருவாக்குதல் வேண்டும். பாடசாலைகளை மூடும் எண்ணங்களைக் கைவிட்டு மாணவர்களை அதிகரிப்பதற்கு என்ன உத்திகளை கையாளலாமென கல்விப்புலம் சார்ந்தவர்கள் சிந்திக்கவேண்டும். சிறைச்சாலைகளைத் திறப்பதனைவிட கல்விச்சாலைகளைத் திறவுங்கள். சிறைச்சாலைகள் மூடும் நிலை உருவாகுமென மகாத்மா காந்தி தெரிவித்தார். அக்கருத்துக்கு அமைவாக பள்ளித் தலங்களை மூடாது பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக.

**– ஆசிரியர்**

## புதுவருட கவிதை

# காலம் மாறியதால்...

ஆக்கம் : S. யாதவன்

போகம் மாறி
பொலிவிழந்த பனையோலை
காலம் மாறியதால்
கவனிப்பார் இன்றி
காவோலையாகி
கழன்று விழுகின்றது.

கிட்டி புள்ளும்
கிளித்தட்டும்
கெந்தி விளையாடியதும்
விட்டு விலகி
வெகுகாலம் ஆச்சு
விளங்காமல் போச்சு

சித்திரை வருமுன்பே
சிறுதேங்காய் தேடி

தும்பு நீக்கி
துடைத்து பத்திரமாய்
எண்ணெய் தடவி
எடுப்பாய் மினுங்க
கைத்தேங்காயாக்கி
போர்த்தேங்காயடித்து
பூரித்த நிலையிங்கு
புதியவர்க்குத் தெரியாது

வேலிப் பொட்டுக்கால்
புகுந்து சென்று
பக்கத்து வீட்டு
பாலருடன் விளையாடியதும்

பத்து நெருப்புக்குச்சி
பாற்பேணி அரிசி
ஒரு மூடித்தூள்
ஒரு சிறங்கை உப்பு
கடனாய்ப் பெற்று
கண்ணியமாய் கொடுத்து
வாழ்வின் உறவை
வளமாகப் பேணியதும்
வழக்கிழந்து போன
வழிகூடத் தெரியாது

போகம் மாறி
பொலிவிழந்த
பனையோலை
காலம் மாறியதால்
கவனிப்பார் இன்றி
காவோலையாகி
கழன்று விழுகின்றது.

# “சைவத்தமிழர்களின் சொத்தாகிய திருமுறைச் செல்வத்தைக் காத்தல் வேண்டும்.

சைவசமயத்தவர்களின் அரனாக விளங்குவது திருமுறைகள். திருமுறைகளை நித்தமும் நாவில் உச்சரிப்பவர்கள் நலம்பெறுவர். எல்லாத் துன்பங்களையும் போக்கவல்ல திருமுறைகளைப் பாடிப் பயன் பெற்றவர்கள் எம் மூதாதையர்கள். போதிய எழுத்தறிவில்லாதவர்கள் கூட முன்பு கேள்வி ஞானத்தால் திருமுறைகளை அறிந்து பயன்பெற்றனர். இன்று எம் மத்தியில் திருமுறைகள் பற்றிய அறிவு வளராமல் இருப்பது தவக்குறைவே. நாடு, வீடு நன்றே சிறக்க இறவா வரம் பெற்ற இனிய திருமுறைகளை பொருள் விளங்கிக் கற்கவேண்டும். எல்லா நிகழ்ச்சிகளிலும் திருமுறைக்கு சைவமக்கள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

அருளாளர் எமக்கு அனுபூதியாக தந்த பொக்கிசங்களை நாமும் அனுபவித்தால் அல்லல் போய்விடும். ஞானக் குழந்தையாகிய ஞானசம்பந்தர் பாடிய திருமுறைகள் எம் வாழ்வை நல்வழியால் வளப்படுத்தும் தன்மை கொண்டவை இறைவனுக்கு நாம் செய்யும் பூசைகளுக்கு அப்பால் இசையால் அர்ச்சிக்கும் அர்ச்சனை உன்னதமானது, உருக்கமானது. இலங்கை வேந்தன் இராவணன் சிவவழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தவன். பக்தி மேலீட்டால் கயிலாச மலையைப் பெயர்த்து வரமுயன்றவன். அவனை ஆட்கொள்ள இறைவன் மலையை பெயர்க்க முனைந்தவனை தன்கால் விரல்களால் தடுத்து நிறுத்திய போது இறைவனின் சீற்றத்தைத் தணிக்க அவன் சாமகானம் பாடினான் என்றும், சாமகானம் கேட்டு பரம்பொருளாகிய சிவன் இராவணனை மன்னித்ததையும் திருமுறைகளின் வாயிலாக நாம் அறியலாம். ஞானசம்பந்தப் பெருமான் திருப்புகலூர் திருத்தலம் மீது பாடிய திருமுறைகளில் இச்செய்தியை அழகாக பின்வருமாறு விளக்குகிறார்.

தென் இலங்கை அரயன் வரை பற்றி எடுத்தான் முடி தண் தோள்
தன் இலங்கு விரலால் நெரிவித்து இசை கேட்டு அன்று அருள்செய்த
மின் இலங்கு சடையான் மடமாதொடு மேவும் இடம் என்பர்
பொன் இலங்கு மணிமாளிகை மேல்மதி தோயும் புகலூரே.

இசை இன்பமே இறையின்பம். தெய்வீக இசையாகிய திருமுறைகளை எங்கும் ஒலிக்கச் செய்தல் காலத்தின் கட்டாயமாகும். வீடுகள் தோறும் திருமுறைகளைத் தினமும் குடும்பமாகப் பாடும் பண்பு பயன்தரும். எமது அடுத்த தலைமுறை திருமுறையைப் பேணுவதற்கு பெரு வாய்ப்பாகும். திருக்கோயில்களில் கூட்டுப்பிரார்த்தனைகளூடாக திருமுறையை வளர்க்கலாம். பலர் தற்போது கூட்டுப் பிரார்த்தனைகளில் பஜனைப் பாடலுக்கு முக்கியத்துவம் கொடுக்குமளவு திருமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இந்நிலை மாறவேண்டும். தமிழ் மந்திரமாகிய திருமுறைகளைத் தினமும் நாம் பேணுவதற்கு நன் முயற்சிகள் செய்தல் வேண்டும்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**

# இரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி

மொழி பெயர்ப்பு : பூ. சோதிநாதன்
ஒய்வுநிலை விரிவுரையாளர்.

## 11. அவன் அருகில் நீ நிற்பாய்

ஓதுதல் பாடல் அக்கை
உருட்டிமந் திரத்தைச் செப்பல்
போதுமே! கதவைப் பூட்டிப்
பூசனை அறையி ருட்டில்
ஏதுநீ தொழுவதப்பா?
எதிரிலே கடவுள் என்றே
யாதுமே இல்லைக் கண்ணை
அகலநீ திறந்து பாராய்.

கடுவலில் நிலத்தை நன்றாய்க்
கலப்பையால் உழுவார் கல்லை
எடுத்துடைத் தரிய வீத
எடுப்பவர் இடத்திற் சேர்ந்தே
உடுத்திடும் உடையும் தூசி
உகுத்திடும் மழையில் வெய்யில்
அடுத்துநிற் பானைக் காணில்
ஆங்குநீ யும்பார் வந்தே.

முத்தியா? அதனைக் காண
முடியுா எங்கும்? எங்கள்
உத்தமத் தலைவன் தானும்
உவகையாய்ப் படைப்பில் தன்னை
அத்துணைப் பந்தம் ஆக்கி
அகப்படு கின்றான் காலம்
அத்தனை புமெம்மோ டொன்றாய்
அகப்பட நிற்கின் றானே.

உன்னது தியானம் கையில்
உளமலர் தீபம் எல்லாம்
இன்னமும் வேண்டாம் என்ன
இழுக்கினை ஆடை கீறல்
மன்னிய அழுக்குச்செய்யும்?
மருவிய நெற்றி வேர்வை
அன்னதோர் வேலையோடும்
அவனரு கில்நீ நிற்பாய்.

## 12. ஆதியில் வந்தசோதி அருங்கதிர் ஒன்றில் வந்தேன்

சேதியைக் காணா அந்தச்
செல்வழி நீண்ட தூரம்
போதியோ என்னப் போகும்
பொன்னென வாய்த்த நேரம்
ஆதியில் வந்த சோதி
அருங்கதிர் ஒன்றில் வந்தேன்
ஆதியைத்தேடி எங்கும்
அலைகிறேன் யாத்தி ரைக்காய்.

வனமெனச் சொல்லத் தக்க
வனப்புள உலகம் எல்லாம்
தினம் ஒளி பரப்பும் மாயத்
திருமிகு நட்சத்திரத்தின்
இனமெனும் மண்ட லங்கள்
இவைகளில் தடயம் வைத்தே
முனதெனும் ஒளியின் தேரில்
முன்னுற வெளியே வந்தேன்.

என்னது பாதை நீண்டே
எப்படிப் போன போதும்
அன்னதோ உனக்கே மிக்க
அருகிலே உள்ள தாகும்
சொன்னஅப் பயிற்சி எல்லாம்
சுருதிபோலல் வளைந்து செல்லும்
பன்னிய கீதம் என்றே
பவ்விய மாகச் செல்லும்

பயணிகள் பக்க வீடு
பலதையும் தட்டிப் பார்த்த
செயலினைத் தொடர்ந்து பின்னர்
சேருவார் தங்கள் வீட்டை
முயன்றுதான் இதயத் துள்ளே
மூழ்கியே போவ தற்கும்
உயர்ந்த இவ் உலகம் யாவும்
உழன்றுநாம் அலைதல் வேண்டும்

கண்களால் உன்னைக் காணக்
கருதியே திசைகள் தோறும்
எண்ணிநான் நோக்கி நோக்கி
எத்திசை தன்னி லேயும்
கண்களால் காணேனன் ஆகிக்
கண்களை மூடிக் கொள்ள
திண்ணமாய் இருக்க இங்கே
சிக்கெனப் பிடித்துக் கொண்டேன்

எங்குநீ உள்ளாய் என்றே
ஏங்கிநான் விட்ட கண்ணீர்
எங்குமாய்ப் பெருகி ஓடை
எனப்பல நூறு நூறாய்
பொங்கிட நானே உண்மைப்
பொருளெனும் பெரிய வெள்ளம்
சங்கம மாகிப் பூமி
தானும்பி ரளயம் ஆகும்.


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக் கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

கலாநிதி ஆறு. திருமுருகன்
021 - 222 6550

கண் வைத்திய நிபுணர்
Dr. ச. குகதாசன்
021 - 222 3645

# பசுமாடு சொன்னகதை

**திரு. வே. தனபாலசிங்கம் அவர்கள்**

பூரணைத் தினத்திலே ஒரு வீட்டிலே மனிதர்கள் சிலரைப் பசுமாடு கண்டது. மாட்டிற்கு மகிழ்ச்சி பொங்கியது. அது சொல்லத் தொடங்கியது.

மாண்புமிக்க மனிதர்களே! யான் சொல்லும் கதையைக் கேளுங்கள். உங்களால் போற்றப்படுகின்ற ஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பாமாலை பாடம் செய்திருப்பீர்கள். அதில் அந்தணர் வாழ்க, வானவர் வாழ்க, ஆனினம் வாழ்க என்று திருவாய் மலர்ந்தருளினார். ஏன் அப்படிச் சொன்னார் என்று பகுத்தறிவுள்ள மக்கள் சிந்தித்திருப்பீர்கள்.

சைவசமயத்தவர்கள் எங்களை மிக அன்பாக வளர்க்கின்றார்கள். பெண்களுக்கு அவர்கள் கொடுக்கும் மதிப்பு (பசுக்களுக்கு) மிகப்பெரியது. தெய்வமாக மதிக்கின்றீர்கள். கோமாதா என்று அழைக்கின்றீர்கள், போற்றுகின்றீர்கள். சகல வியாதிகளையும் நீக்கும் பஞ்ச கவ்வியம் செய்வதற்கு நாம் உதவுகின்றோம். எங்களில் இலக்குமி வாசஞ்செய்வதாக உங்களில் படித்தவர்கள் சொல்லுகிறார்கள். பூரண சத்துள்ள உணவை நாம் தருகின்றோம். உங்களுக்கு மட்டுமல்ல, இறைவனுக்கு குடமுழுக்குச் செய்ய எமது பால் எடுக்கின்றீர்கள். சாணியைப் பயன்படுத்தி திருநீறு செய்கின்றீர்கள். முன்பு சிலர் சாணியைக் காயவைத்து விறகாக எரித்தார்கள். கிராமப்புற மக்கள் தங்கள் வீடுகளைச் சாணியால் மெழுகிப் புனிதமாக வைத்திருக்கிறார்கள். மங்கல கருமங்களுக்குப் பிள்ளையாராகப் பிடித்து அறுகம்புல் வைத்துத் தலைவாழையிலையில் வைக்கின்றீர்கள். அப்பொழுது எமக்குப் பெரும் மகிழ்ச்சி. அந்தணப் பெருமக்களுக்கு எம்மைக் கோதானமாக வழங்குகின்றீர்கள். திருமணப் பந்தலில் மணமக்கள் எங்களில் ஒருவரைப் பார்க்கும்படி சபையில் காட்டுகிறீர்கள். பட்டிப் பொங்கல் விழா வைத்துக் கொண்டாட்டம் நடத்துவது, சத்துள்ள உணவுகளைத் தருவது இவையெல்லாம் எமக்கு மகிழ்ச்சி.

எமது இனம் உலகம் எல்லாம் உண்டு. உயர்வான சாதி, குறைவான சாதி எல்லாம் எங்கள் இனத்தில் உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். எருதுகள் என்று நீங்கள் அழைப்பவர்கள் உங்களுக்குப் பெரிய உதவிசெய்கிறார்கள். விஞ்ஞான வளர்ச்சி குறைந்த காலத்தில் எருதுகள் செய்த நன்றியை எண்ணிப் பாருங்கள். கமக்காரர்கள் பெரிய உதவிகள் பெற்று வாழ்ந்தார்கள். சவாரி செய்து மகிழ்ச்சி கொண்டவர்கள் சிலர். இன்று நாகரிகம் மாற்றம் பெற எமது இனத்தின் உதவி குறைந்துவிட்டது.

அன்பான மனிதர்களே, உங்களில் சிலர் செய்யும் கொடுமைகளையும் சொல்லுகின்றேன். சைவம் சிவத்தோடு சம்பந்தமானது. அன்பே சிவம். நீதி தான்

கடவுள் என்றுசொல்லுகின்றீர்கள். வள்ளுவர் புலால் மறுத்தலைப் பற்றிச் சொன்னதைப் படிக்கின்றீர்கள். கொலையும் புலையும் தவிர் என்று படித்தவர்கள். கற்றதன்படி வாழமுடியாதவர்கள் உங்களுள் இருக்கின்றார்கள். எமது இனம் எந்த உயிரையும் கொல்லமாட்டோம். உயிர் நீங்கிய உடலை உண்ணமாட்டோம். தாவர உணவு உண்பவர்கள் என்பது உங்களுக்குத் தெரியுந்தானே.

போர்த்துக்கீசன் இலங்கையின் கரையோரப்பகுதியை ஆண்ட காலத்தில் தமது உணவிற்கு ஒவ்வொரு வீடும் ஒரு எருதும் ஒரு பசுவுந்தரவேண்டும் என்று கட்டாயப்படுத்திய படு பாதகச் செயலைக் கண்ட சுவாமி ஞானப்பிரகாசர் நாட்டைவிட்டு வெளியேறிச் சிதம்பரத்திலே போயிருந்து துறவியாகித் தொண்டாற்றினார். ஆவினத்தைக் கொல்வது பாவம் என்பதை மறந்துவிட்டீர்களே". மானிடப்பிறவி அரிது என்று பெருமை பேசும் நீங்கள் பகுத்தறிவுள்ளவர்கள். கொலை செய்து உண்பது நல்லதா? எங்களைக் கொல்லாதீர்கள். நாங்கள் இறந்த பின் எங்களை உண்ண விரும்பினால் உண்ணவும். சைவநீதியை மதித்து வாழுங்கள். உங்களுக்கு நன்மை கிடைக்கும்.

## கோமாதா குலம் காப்போம்

**கோமாதாவில் சகல தெய்வங்களும்**
**கொலுவிருக்கிறார்கள். ஆதலால்**
**கோமாதாவைப் பராமரித்து வணங்கினால்**
**எல்லாத் தெய்வங்களின் அருளும் கிடைக்கும்.**

## சிறுவர் தொடர் கட்டுரை – 3

# கோவிலில் வழிபட வாருங்கள்

**திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

கோவிலின் உள்ளே சென்று வழிபடுவதற்காக அம்மம்மாவுடனும் அம்பிகையுடனும் புறப்பட்ட கணாதிபன் "கடவுளை வழிபடாதவர்களைத்தானே இயமகிங்கரர்கள் பிடிப்பார்கள். கோவிலைக் கும்பிடப் போகிறவர்களை ஏன் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்?" என ஒரு வினாவை அம்மம்மாவிடம் கேட்டான்.

கணாதிபனின் கண்களுக்கு எப்படி இயமதூதர்கள் தோற்றுகின்றார்கள்? என்று அம்மம்மா திகைத்துப் போய் அவனைப் பார்த்தார். அவனது கண்கள் கோவில் வாயிலின் இருபுறமும் மாறி மாறி அலைவதனைக் காணவும் அவருக்குச் சிரிப்பு வந்தது. துவாரபாலகர்களின் சிற்பங்கள் அங்கிருந்தன.

"இவர்கள் இயம தூதர்களில்லை. துவாரபாலகர்கள்" என்று விளக்கம் கொடுத்தார் அம்மம்மா.

"அப்படியென்றால் யார் அம்மம்மா?"

"அப்படியென்றால் வாயிற் காப்போன், அல்லது காவலாளி. துவார என்றால் வாயில் பாலகர் என்றார் காப்பவர்". கணாதிபனுக்கு அம்மம்மா மேலும் விளக்கமளித்தார். "இவர்களுடைய முகத்திலே வீரம்தானே தெரிகிறது. பயங்கரமாக இவர்களது தோற்றமில்லையே. ஏன் கணாதிபா இவர்களை இயமகிங்கரர் என்று நினைத்தாய்?

"தவறுதான் அம்மம்மா".

"இறைவனின் இல்லத்திற்குக் காவலாளி என்றால் அவர்களது அனுமதி பெற்றுத்தான் உள்ளே போகவேண்டும்" அம்பிகை சிரித்தபடி கூறினாள்.

"கோவிலை இல்லம் என்பதைவிட ஓர் உடலுக்கும் ஒப்பிடுவார்கள். உள்ளே ஈசன் வீற்றிருக்கும் கருவறையைத் தலையென்றும் அதையடுத்து இருக்கும் அர்த்தமண்டபத்தைக் கழுத்து என்றும் கூறுவர்".

"சிவாச்சாரியார் நின்று தீபாராதனை செய்யும் மண்டபந்தானே அர்த்த மண்டபம்?"

அம்பிகை அம்மம்மாவின் விளக்கத்தின் இடையே வினாவொன்றைத் தொடுத்தாள்.

"அதேதான். அதற்கடுத்திருக்கும் மகா மண்டபத்தில் உற்சவமூர்த்திகளை

எழுந்தருளச் செய்திருப்பார்கள். இதை மார்புப் பகுதியாகக் கொள்கின்றனர். இதற்குத் தென்புறத்தில் ஒரு வாயில் அமைந்திருக்கும். உற்சவ மூர்த்திகளுக்கான பூசை வழிபாடுகளை இதனூடாகத் தரிசிக்கலாம்".

"அதற்கு அடுத்த மண்டபம் வயிறுதானே" என்று கேட்டு தனக்கும் விடய ஞானம் இருப்பதாகக் காட்ட கணாதிபன் முற்பட்டான்.

"பெரிய கண்டுபிடிப்பு. அது என்ன மண்டபம் சொல் பார்க்கலாம்" என அம்பிகை அவனைச் சீண்டினாள்.

"கணாதிபன் கெட்டிக்காரன், சண்டை போடத் தொடங்கிவிடாதீர்கள். ஆலயத்தினுள் அமைதியாக சாந்தமாகச் சென்று வழிபடவேண்டும். கேலி, கோபம் இவற்றையெல்லாம் விட்டுவிடவேண்டும். வயிற்றுப் பகுதியாகக் கருதப்படுவது நிருத்தமண்டபம். இங்கேதான் யாககுண்டம் அமைத்திருப்பார்கள். இதற்கு அடுத்திருக்கும் தம்பமண்டபம் கால்களாகக் கொள்ளப்படுகிறது. இங்குதான் நந்தியெம்பெருமாள், பலிபீடம், கொடித்தம்பம் என்பன இருக்கின்றன. இந்தக் கோபுர வாசலைப் பாதங்கள் என்பார்கள்".

"அம்மம்மா, எங்களுடைய சமயத்தில் உள்ள தத்துவங்களை அறிய அறிய வியப்பாக இருக்கும். அவற்றுள் பலவற்றை நாங்கள் விளங்கிக்கொள்வதில்லை. அம்மம்மாவின் விளக்கத்தைக் கேட்ட அம்பிகை தன் வியப்பை வெளியிட்டாள்.

"இப்போது நாங்கள் தம்பமண்டபத்திற்கு வந்துவிட்டோம். இங்கேயிருக்கிற பலிபீடத்தை "பத்திரலிங்கம்" என்பார்கள். எமது காமக்குரோதங்களை இங்கு பலியிட்டு வணங்கவேண்டும். எமது ஆசைகள் யாவும் ஒடுங்கும் இடமாக இந்தப் பத்திரலிங்கம் இருக்கிறது".

அம்மம்மா விளக்கிக் கூறிக்கொண்டே சென்றார்.

"இங்கே வணங்கிவிட்டுத்தானே போகவேண்டும்"

கோவிலுக்கு இடையிடையே வந்து வணங்கிச் செல்லும் கணாதிபனுக்கும் சில விதிமுறைகள் தெரிந்திருந்ததால் இவ்வாறு அம்மம்மாவிடம் கேட்டான்.

"பலிபீடத்திற்கு இந்தப் பக்கம் வணங்கவேண்டும்" என்று அம்பிகையும் தான் அறிந்து வைத்திருந்ததைக் கூறினாள்.

"நான் அட்டாங்க நமஸ்காரந்தானே செய்யவேண்டும்" இல்லையா அம்மம்மா? ஆண்கள் செய்வது அட்டாங்க நமஸ்காரம். "அட்ட அங்கம்" என்றால் எட்டு உறுப்புகள். தலை, இரண்டு கைகள், இரண்டு காதுகள், மோவாய், இரண்டு புயங்கள் ஆகிய எட்டு அங்கங்களும் நிலத்திலே தோயும்படி நமஸ்கரிக்க வேண்டும்"

கணாதிபன் சொல்லிமுடிக்கவும் அம்பிகை "பெண்கள் தலை, இரண்டு கைகள், இரண்டு முழந்தாள்கள் ஆகிய ஐந்து உறுப்புகளும் நிலத்திலே தோயும்படி பஞ்சாங்க நமஸ்காரம் செய்யவேண்டும். பஞ்ச என்றால் ஐந்து. திரியங்க என்றால் மூன்று அங்கங்கள். தலையிலே இரு கரங்களையும் குவித்து வணங்குவது திரியங்க நமஸ்காரம். இதை ஆண்களும் செய்யலாம், பெண்களும் செய்யலாம்" எனப் படபடவெனக் கூறினாள்.

அம்மம்மா மகிழ்ச்சியும் பெருமையும் பொங்க அவர்களைப் பார்த்துக்கொண்டு "ஆண்டவா, இந்த மொட்டுகள் அழகுமலர்களாக மலர்ந்து எதிர்கால உலகை அழகும் நறுமணமும் நிறைந்ததாக ஆக்கவேண்டும். இந்த உலகம் பக்தியும் ஆனந்தமும் கொண்டதாக விளங்கவேண்டும் என மனப்பூர்வமாகப் பிரார்த்தித்துக் கொண்டார்.

"கெட்டிக்காரப் பிள்ளைகள், வணங்கும்போது கிழக்குப் பக்கமோ வடக்குப் பக்கமோ கால்நீட்டக்கூடாது. மூன்று தரமோ, ஐந்து தரமோ, ஏழு தரமோ, ஒன்பது தரமோ, பன்னிரண்டு தரமோ நமஸ்காரம் செய்யவேண்டும். ஒரு தரமோ, இரண்டு தரமோ மட்டும் செய்யக்கூடாது" என்று அம்மம்மா அவர்கள் மேலும் அறிந்துகொள்ளவேண்டியவற்றைக் கூறினார்.

"அட்டாங்க நமஸ்காரம் செய்யும்போது காதுகள் எப்படி நிலத்தில் படும்" என அருகில் நின்ற சிறுவனொருவன் கேட்டான். இவர்களது உரையாடலை அவனும் அவதானித்துக் கொண்டிருருந்திருக்கிறான். "தலையும் மார்பும் பூமியில் படும்படி வீழ்ந்து வலக்கையை முதலிலும் இடக்கையைப் பின்பும் நேரே நீட்டவேண்டும். அதேவிதமாகக் கைகளை மடக்கி வலதுபுயமும் இடது புயமும் மண்ணிலே தோயும்படி செய்து தலையைத் திருப்பி வலது காதை முதலிலும் இடது காதைப் பின்பும் பூமியில் படுமாறு செய்து வணங்கவேண்டும்".

கணாதிபன் எவ்வாறு நமஸ்கரிக்க வேண்டுமென அப்பையனுக்கு விபரித்துக் கூறினான்.

"தம்பி, ஆண்கள் மேலங்கியுடன் அதாவது சேட்டுடன் கோவிலுக்குள் செல்லக்கூடாது" என்று அம்பிகை மேலங்கியுடன் நின்றிருந்த அந்தச் சிறுவனைப் பார்த்துக் கூறினாள்.

"அதுமட்டுமல்ல, இப்போது ஒவ்வொருவருடனும் கூடவே இருக்கின்ற இந்தக் கைபேசிகளை அலறாமல் செய்யவேண்டும். அந்த அலறல் நிம்மதியாகக் கும்பிடவிடாது" என்றார் அம்மம்மா.

"மணியோசை, நாதஸ்வர இசை, சங்கு, சேமக்கலம் இப்படிப்பட்ட பலவற்றோடு

ஒன்றாக இதையும் நினைத்துக் கொள்ளலாமே அம்மம்மா".

கணாதிபன் அம்மம்மாவின் கைபேசியின் ஒலி பற்றிய கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கிறானா? அன்றேல் வேறோர் ஆலோசனை கூறுகிறானோ? என்று அம்பிகை சிந்தித்துக் கொண்டிருந்தாள். கணாதிபன் சொல்வதுபோல் அந்த சப்தத்தைக் கவனத்தில் எடுக்காமல் விடலாந்தானே என்று அவளுடைய சிந்தனை சென்றது.

"அப்படிச் சொல்லமுடியாது கணாதிபன்" அந்தக் காலத்தில் பறையைப் பல்வேறு தேவைகளுக்கு உபயோகித்தார்கள். அந்த ஒலியைக் கொண்டு அது எதற்காக ஒலிக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்வார்கள். அதே போன்றுதான் கோவிலில் ஒலிக்கும் மணியும் நாதஸ்வரமும் மனதில் பக்தியை ஏற்படுத்தும். எங்கள் காதுகளும் மனங்களும் அவ்வாறு பழகியுள்ளன. ஆனால் வேறு சப்தங்கள் எமது மன ஒருமைப்பாட்டைக் குலைக்கும். பக்கத்தில் நிற்பவரின் செல்லிடபேசியின் ஒலியால் எமது கவனம் கலையும். எங்களிடமே உள்ள செல்லிடபேசி ஒலித்தால் ஒலித்தபின் நிறுத்தினால்கூட எங்கள் மனங்கள் அலைபாய ஆரம்பித்து அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும். இறைவனைச் சிந்திப்பதையே மறந்துவிடும்".

"அது மட்டுமில்லை அம்மம்மா, தீபாராதனை நடைபெறும் நேரம் பார்த்து கைபேசி சத்தம் போடும்" என்றான் கணாதிபன்.

"அருச்சனைப் பொருட்களை சிவாச்சாரியாரிடம் கொடுக்கும் சமயத்தில் அழைப்போசை கேட்கும். இப்படியெல்லாம் நடக்காமலிருக்க கைபேசியைக் கொண்டுபோகாமல் விடுவதோ அல்லது நிறுத்திவைப்பதோ தான் நல்லது" என்று முடிவாகச் சொன்னாள் அம்பிகை.

மூவரும் பலிபீடத்திற்கு இப்பால் வணங்கியெழுந்து மேற்கொண்டு வழிபட ஆயத்தமாகினர்.

## திரு அங்க மாலை

**ஆக்கையாற் பயனென்**
**அரன் கோயில் வலம் வந்து**
**பூக் கையாற் அட்டிப் போற்றி என்னாத**
**இவ் ஆக்கையாற் பயனென்.**

**–திருநாவுக்கரசுநாயனார் –**

# தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள்

– சகோதரி யதீஸ்வரி

சனாதன தர்மம் என்று சொல்வது புண்ணிய பாரத நாட்டின் பண்டைக்கால ரிஷிகளும் தீர்க்கதரிசிகளும், தத்துவஞானிகளும் நமக்கு வகுத்து வைத்த அருமையான வாழ்வியற் கோட்பாடாகும். ஒரு உயிர் அதன் வினைப்பயனுக்கு ஏற்ப பல பிறவிகள் எடுக்கின்றது என்பது உலகின் பல சமயங்களின் நம்பிக்கையாகும்.

“புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாகி. . . .
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்”
என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

எல்லாப் பிறவிகளிலும் செய்த நல்வினைப் பயனால் கிடைப்பது மனிதப் பிறவி. இந்தப் பிறவி ஒரு எல்லைக்கோட்டில் இருக்கிறது. மிகச் சிறந்த பதிபுண்ணியம் என்று சொல்லப்படும் புண்ணியத்தைச் செய்தவர் இந்த எல்லையைக் கடந்து, எல்லையற்ற பரம்பொருளோடு கலந்து இனிப் பிறவாப் பெருநிலையடையலாம் என்பது ஆன்றோர் கருத்து. அப்படியில்லாமல் மீண்டும் பாவங்களைப் புரிபவர் தான் கடந்து சென்ற அதே வழியில் திரும்பி இறங்கிச் செல்லவேண்டி நேரிடும். அதாவது மீண்டும் பல பிறவிகளில் புக நேரிடும் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆன்மா பிறவாப் பெருநிலையடைந்து இறையருளில் கலப்பதை முத்திநிலை என்று சொல்வர். அந்த நிலையை அடைவதற்கு நான்கு படிமுறைகளை எமது சனாதன தர்மம் வகுத்து வைத்துள்ளது.

பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பதே அந்த நான்கு படிநிலைகளாகும். இவற்றை படிப்படியாகக் கடந்து செல்பவன் பிறவாப் பெருநிலையடையலாம். மனிதருக்கு இந்த நெறியில் செல்ல உதவுவதற்கும் நிறுவன ரீதியான சில அமைப்புக்கள் காலத்திற்குக் காலம் இருந்துவந்துள்ளது. குருகுலங்கள், ஆலயங்கள், அறச்சாலைகள், மடாலயங்கள், குருசீட பரம்பரையினை வளர்த்து ஆன்மாவை பக்குவப்படுத்தக்கூடிய ஞானிகள், தபோதனர்கள், அவர்கள் வாழும் இடங்கள் அதாவது ஆச்சிரமங்கள். ஆன்மா விடுதலை பெற அவாவுறும் மனிதரை ஊக்கப்படுத்தி அரவணைத்து நற்போதனைகள் செய்து உணவு, உடை, பாதுகாப்பு என்பவற்றை அளித்து உடந்தையாக இருப்பதே ஆச்சிரமம். தற்காலத்தில் இது அருகிவிட்டது. இலங்கையில் மிகப்பெரும் ஞானசித்தராகிய தவயோகர்

சுவாமிகளுடைய சீடபரம்பரையினர் சிலர் இத்தகைய நிறுவனங்களைத் தோற்றுவித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் சிவதொண்டன் நிலையம், கிளிநொச்சியில் ஸ்ரீ மகாதேவா ஆச்சிரமம், மட்டுநகரில் சிவதொண்டன் நிலையம் என்பன அவற்றில் சில. யாழ்ப்பாணத்திலுள்ள சிவகுருநாதபீடம் எனும் வேதாந்த மடமும் அவற்றுள் அடங்கும்.

இந்த வேதாந்த மடத்தில் பயின்று யோகர் சுவாமிகளுடைய அருளைப் பெற்று அவருடைய உபதேசப்படி கிளிநொச்சியிலுள்ள ஜெயந்திநகர்ப் பகுதியில் தனது ஞானகுருவின் பெயரால் அமைக்கப்பட்டது "மகாதேவா ஆச்சிரமம்". இதை அமைத்தவர் தவத்திரு வடிவேல் சுவாமிகள். அவரிடம் நல்ல உபதேசங்களைப் பெற்று ஆச்சிரமத்தில் பயின்று துறவு வாழ்வு மேற்கொண்ட சிலருள் ஒருவரே தமது குருவிற்குப் பின் ஆச்சிரமத்தின் பொறுப்பை ஏற்றார். அவருடைய திருநாமம் தவத்திரு கணேசானந்த மகாதேவா. கடந்த 30 வருடங்களாக ஆச்சிரமப் பணிகளை மிகச் சிறப்பாக நடத்தி வருபவர் அவர்.

பெரிய தனவந்தராக, கமக்காரராக, தொழிலதிபராக ஏராளமான சொத்துக்களை உடைமையாகக் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்செய்கை ரீதியாக நிறையப் பணி செய்தவர் இவர். தூய பிரமச்சாரியாக சிறுவயது முதலே வடிவேல் சுவாமிகளுடைய அடியைப் பின்பற்றி அவருடைய சீடனாக வாழ்ந்து வருபவர். அனைத்துப் பொருளையும் துறந்து கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினூடாக தானும் ஓடித்திரிந்து, ஓடித்திரிந்த இடமெல்லாம் மக்கள் சேவை செய்தவர். சைவச்சிறுவர் இல்லமொன்றைத் தொடங்கி, யுத்தத்தால் இன்னலுற்ற ஏராளமான சிறுவர்களுக்கு நிறைவான இல்லம் அமைத்தவர். துன்பப்பட்ட சிறுமிகளுக்காக பரமானந்தவல்லி நினைவு இல்லமொன்றினைத் தொடங்கி, பெண் குழந்தைகளுக்கும் ஆதரவு அளித்தவர். முதுமை காரணமாக இல்லப் பொறுப்புக்களைத் தகுதியான பெரியவர்களிடம் கையளித்துவிட்டு ஆச்சிரமப்பணிகளை முன்னெடுத்தவர். தற்போது கூட பண்ணிசையினை வளர்ப்பதற்காக ஆச்சிரமத்திற்கு அருகில் புதிய கட்டிடம் ஒன்றினை உருவாக்கியுள்ளார். இந்நிலையில் 92 வயதினைப் பூர்த்தி செய்யும் உடலின் தளர்ச்சியால் தற்போது அமைதியான அகமுக நோக்குடன் புறச்செயலற்று இருக்கின்றார். இவரது பணிகள் காலத்தினால் அழியாத உபகரிப்புக்கள் என்பதை மறக்கமுடியாது.

# 75ஆவது அகவை நிறைவு வாழ்த்து



27-03-2017இல் 75ஆவது அகவையை

நிறைவு செய்த எமது

நிர்வாகசபை உறுப்பினரும்

மகளிர் இல்ல ஆலோசகராகவும்

பணியாற்றிவரும்

**திருமதி கலாதேவி பொன்னம்பலம்**

அவர்கள்

உடல், உள ஆரோக்கியத்துடன்

துர்க்கையம்மாளின் அருளோடு - வாழ

வாழ்த்துகின்றோம்.

நிர்வாக சபை

துர்க்காதேவி தேவஸ்தானம்,

துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

## தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் சாதனை

## க.பொ.த. (உ/த) பரீட்சையில் 2016 சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்





செல்வி தர்மினி தவராசா
வர்த்தகத்துறை
**3A**



செல்வி கிருஷாந்தினி நவரத்தினராசா
கலைத்துறை
**A, 2B**

# தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 35ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் - 2017



விருந்தினர்கள் அழைத்துவரப்படுதல்



விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுதல்.



வரவேற்பு நடனம்




பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குகின்றார்.




நிர்வாகசபை உறுப்பினர் திருமதி கலாதேவி பொன்னம்பலம் வரவேற்புரை நிகழ்த்துகின்றார்.




இல்ல அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் வாழ்த்துரை வழங்குகின்றார்.




தலைவர்
செஞ்சொற்செல்வர்
கலாநிதி
ஆறு.திருமுருகன்
அவர்கள்
தலைமையுரை
நிகழ்த்துகின்றார்.





பிரதம விருந்தினர்
யாழ். பல்கலைக்கழக
துணைவேந்தர்
வசந்தி அரசரட்ணம்
அவர்கள் உரையாற்று
கின்றார்.





சிறப்பு விருந்தினர்
இராமநாதன்
கல்லூரி அதிபர்
திருமதி
க. கிருஷ்ணபிள்ளை
அவர்கள்
உரையாற்றுகின்றார்.




உப பொருளாளர்
திரு. சு. ஏழூர்நாயகம்
அவர்கள்
நன்றியுரை
ஆற்றுகின்றார்.




பரிசளிப்பு





பரிசளிப்பு

# முன்னாள் மகளிர் கௌரவிக்கப்படுகின்றனர்




திருமதி. வடிவாம்பிகை



திருமதி. கோகிலா




திருமதி. தவனேஸ்வரி

# கலை நிகழ்வுகள்


தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் 35வது ஆண்டுகள் நிறைவும் பரிசளிப்பு விழாவும் 2017


தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் 35வது ஆண்டுகள் நிறைவும் பரிசளிப்பு விழாவும் 2017


தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் 35வது ஆண்டுகள் நிறைவும் பரிசளிப்பு விழாவும் 2017
2017 03.17

# கலை நிகழ்வுகள்









# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா 11-04-2017











# பன்றித்தலைச்சி அம்மன் திருக்கோவில் சிறப்பு

ஈழவளநாட்டிலே வடபாகத்தே குடாநாட்டிலே தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் கிராமத்தில்" பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் "எனும் புண்ணிய சேத்திரம் அமைந்துள்ளது. தொன்று தொட்டு விளங்கும் இந்து சமய வழிபாட்டிலே தாய்த் தெய்வ வழிபாடானது பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலயத்திலே சிறப்புற்று விளங்குகின்றது. இவ் ஆலயம் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததாகும்.

தற்போது நாம் காணும் இடத்தில் உள்ள ஆலயம் கி.பி 1750 இல் திரு.நாகர் கதிர்காமர் என்பவரால் வைரக்கற்களைக் கொண்டு கட்டப்பெற்றதாகும். மூலஸ்தானத்தின் மேற்குப்புற வைரக்கற்சுவரில் 1750 என ஆண்டு பொறிக்கப் பட்டுள்ளது. இதற்கு முன்பு அமைந்திருந்த ஆலய அமைப்பிற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன.

அதாவது பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவில் தற்போது உள்ள இடத்தில் முன்னர் அமைந்திருக்கவில்லை. பழைய கோவில் தற்போதுள்ள கோவிலுக்கு வடக்குப் பக்கமாக இருந்திருக்கவேண்டும் அதற்கான செங்கற்கட்டிட இடிபாடுகள் தற்போதுள்ள ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் இன்றும் காணப்படுகின்றன. அத்துடன் பிள்ளையார், கந்தசாமியார் கோவில்களும் மேற்குப்புறத்தே அமைந்திருந்தமைக்கான அடையாளங்களும் காணப்படுகின்றன.

இவ் ஆலயத்திற்கு "பன்றித்தலைச்சி" எனும் பெயர் ஏற்பட்டதைப்பற்றிக் கர்ண பரம்பரைக்கதை ஒன்று கூறப்படுகின்றது. பண்டைக்காலத்திலே வள்ளுவ குலத்தைச் சேர்ந்த பக்தனொருவன் ஆலயத்திற்கு கிழக்கே உள்ள வடலிக்கூடலில் மாடு ஒன்றைக் கொன்றுவிட்டான். அச்சம்பவம் ஊர் மக்களுக்குத் தெரிய வந்தது. தன் தவறை உணர்ந்த பக்தன் அம்பாளை வேண்டித் தொழுதான். மறுநாள் ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் மாட்டின் தலை புதைக்கப்பட்ட இடம் தோண்டப்பட்டது. அங்கு பன்றித் தலையே காணப்பட்டது. அனைவரும் அம்பாளின் அற்புதத்தைக்கண்டு பேரானந்தமடைந்தனர். அன்றிலிருந்து அம்பாள் பன்றித்தலைச்சி அம்மன் என்று பக்தர்களால் வணங்கப்பட்டு வருகின்றாள். ஆரம்ப காலங்களில் அன்னையின் ஆலயத்தில் நிர்வாகிகளே பூஜைகளை மேற்கொண்டு வந்தனர். 1900ஆம் ஆண்டிலிருந்து பிராமணக்குருமார் பூஜைகளை ஆற்றுகின்றனர்.

1939 ஆம் ஆண்டிற்கு முன்பு திங்கட்கிழமைகளில் அம்பாளுக்கு இரண்டு நேரப்பூஜையும் மற்றைய நாட்களில் அபிசேகமும் விளக்கு வைத்தலும் நடைபெற்று வந்தது. 1939இல் இரண்டு கால நித்திய பூஜை நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் ஆசனத்தில் கும்பம் வைத்து முகம் சாத்தி அம்மனுக்கு பூஜை நடைபெற்று வந்தது. தர்மகர்த்தா திரு. சி.சிவகுரு அவர்கள் 1946 ஆம் அண்டில் ஐப்பசி மாதம் உத்தரட்டாதி நட்சரத்தில் கண்ணகை அம்மன் தாமிரவிக்கிரகம் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகத்தை செய்வித்தார். அதே வருடமே மார்கழித் திருவெம்பாவை காலத்தில் வருடாந்த மகோற்வசத்தினையும் முதன் முதலாக ஆரம்பித்தார். 1950 இல் நான்கு நேர பூஜை இடம்பெற்று 1952இல் இருந்து ஆறுகாலப் பூஜை இடம்பெறுகிறது.

பழமை வாய்ந்த கட்டிடங்கள் என்பதனால் மூலஸ்தானத்தினை புனரமைப்பதற்காகவும் பல்வேறு திருப்பணிகளை மெற்கொள்ளும் பொருட்டும் திரு.சின்னப்பா சிவகுரு அவர்கள் 1989 இல் பாலஸ்தாபனம் செய்வித்தார். மூலஸ்தானம் புனரமைக்கப்பட்டும் நீராவி மண்டபம் அமைக்கப்பட்டும் ஸ்துாபி வைக்கப்பட்டும் /இதுவரை காலமும் செப்பினால் வேயப்பட்ட குடில் காணப்பட்டமை நோக்குதற்குரிய துபரிவார மூர்த்திகட்கான ஆலயங்கள் அமைக்கப்பட்டும் 1991 இல் மகா கும்பாபிசேகம் இடம்பெற்றது. 1993 இல் அம்பாளுக்கு சித்திரத்தேர் அமைக்கும் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. 1999 இல் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இடம்பெற்றது. இக்காலப்பகுதியிலே வெள்ளைக்கற்களைக் கொண்டு தேர்த்தரிப்பிடம் அமைக்கப்பட்டது. 2008 இல் இராஜ கோபுரத்திற்கான அத்திபாரம் இடப்பட்டு வெள்ளைக் கற்களைக் கொண்டு இராஜகோபுர கீழ்த்தளம் அமைக்கப்பட்டு 2012 இல் திரிதள இராஜகோபுர கும்பாபிசேகம் இடம்பெற்றது. 2012இன் நடுப்பகுதியில் மணிமண்டப திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு 2013இல் ஒருபகுதி வேலைகள் நிறைவுற்றுள்ளது மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்திலே பங்குனித்திங்கள் உற்சவம் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்று வருகின்றது. "பால்குண மாதம்" என்று கூறப்படும் பங்குனி மாதத்தில் சாக்தவழிபாட்டின் சிறப்பையும் முறைகளையும் எடுத்து கூறும் சாக்த தந்திரங்கள் கண்ணகா பரமேஸ்வரிக்குரிய தியான சுலோகங்களையும், பூஜை முறைகளையும். பிரதிஷ்டை முறைகளையும் மிக சிறப்பாக எடுத்து கூறுகின்றன. மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாளுக்குரிய மிக சிறப்பானபங்குனித் திங்கள் பொங்கல் நிகழ்வுகளும் பூசைக் கிரமங்களும் இவற்றுடன் தொடர்பு படுவதை உற்று நோக்கியறியலாம்.

மட்டுவிலில் கோவில் கொண்ட அம்மனை வேண்டித் தீவின் பல பாகத்திலுமிருந்து மக்கள் தமது நேர்த்திக் கடன்களை செய்வதற்காகவும் தரிசிப்பதற்காகவும் பங்குனித் திங்கள் உற்சவ காலத்தில் ஒன்று கூடுவர். அம்பாளின்

ஆலயத்திலே உள்ள பழமை வாய்ந்த தீர்த்த கேணியிலே நீராடி புனித நீரினை எடுத்து பொங்கல் செய்து ஆலய முன்றலிலே அம்பாளை நினைத்து தாமே நிவேதித்து வணங்கும் சிறப்பு காணப்படுகிறது.

அடியவர்கள் பல பகுதிகளிலுமிருந்தும் காவடி எடுத்து அம்பாளின் சந்நிதியில் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றுவர். மூர்த்திப் பெருமையும், பொங்கல் தலமாகவும் , தீர்த்த விசேடமும் ஒருங்கே அமையப் பெற்ற மட்டுவில் பதி உறைகின்ற கண்ணகைஅம்பாளைஅடியவர்கள் மனம், வாக்கு, காயம், எனும் மூன்றினாலும் தொழுது அனுக்கிரகங்களை பெற வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை
## சித்திரைச் சதயம் - 22.04.2017



**மார்பாரப் பொழி கண்ணீர் மழை வாருந்**
**திருவடிவும் மதுர வாக்கில்**
**சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின்**
**மாலைகளும் செம்பொற் றாளே**
**சார்வான திருமனமும் உழவாரத்**
**தனிப்படையும் தாமும் ஆகிப்**
**பார்வாழ திருவீதிப் பணிசெய்து**
**பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.**

**–சேக்கிழார் பெரியபுராணம் –**

# தாடிச் சித்தர்

மாவை த. சண்முகசுந்தரம்

யாழ்ப்பாணத்தில் தாடிச்சித்தர் என்ற பெயருடன் ஒருவர் இருந்தார். இவரைப் பற்றி எதுவும் தெரியவில்லை. இவரின் இயற்பெயர் பிறந்த ஊர் எதுவுமே தெரியாது. எல்லாத் தேர்த்திருவிழாவிலும் இவர் கலந்து கொள்வார். தேருக்குப் பின்னால் ஆனந்தக்கூத்தாடியபடியே வருவார். வாய்திறந்து அதிகம் பேச மாட்டார். பெயர் ஊரைக் கேட்டாற் சொல்மாட்டார். நடுத்தரமான தோற்றம், மெலிந்த உடல், நீண்டதாடி, இதனாலே தான் இவருக்குத் தாடிச்சித்தர் என்ற பெயர் வந்தது. அரையிலே ஒரு துண்டு மட்டும் உடுத்திருப்பார். மேல் முழுவதும் திருநீறு அணிந்திருப்பார்.

"சாமி, பனிக்குளிர், இதோ ஒரு துண்டு" என்றால் சிரிப்பார். "துண்டைப் போட்டால் திருநீற்றுப் பூச்சுத் தெரியாமல் மறைந்து போகும். செம்மறி ஆட்டிற்கு யாரடா கம்பளி கொடுத்தது" என்பார். பசிக்கும் வேளை மட்டும் உணவு கேட்டு வாங்கி உண்பார். வேட்டி கிழிந்த நிலையில் இருந்தால் மட்டும் அவரின் சீடர்கள் யாராவது வேட்டி ஒன்றைக் கொடுத்தால் வாங்கி உடுத்துக் கொள்வார். குளிர், காற்று, மழை, பனி எல்லா வற்றையும் தாங்கிக்கொள்ளக்கூடிய கடினமான உடல்.

ஒருமுறை இவரின் சீடர் ஒருவர் இவருக்கு வேட்டியொன்றைக் கொடுத்தார். உணவும் கொடுத்தார். இரண்டையும் அன்புடன் பெற்றுக் கொண்டார் தாடிச் சித்தர். இவருடைய பெயர் ஊரைக் கேட்க விரும்பினார் அந்தச் சீடர். அவர் நல்லவர்; பொருள் வளம் சற்று உடையவர்; ஊர் பேரைக் கேட்கவோ விடவோ என்று உள்ளம் கூசினார். கேட்கத் துணிவு வரவில்லை. இரவு நேரம் வந்தது. அந்த அடியார் பாலைக் கொடுத்தார். இருகைகளாலும் தாடிச் சித்தர் வாங்கிக் குடித்து விட்டுப் படுத்தார். சீடரும் நித்திரைக்குப் போய்விட்டார். மறுநாள் காலை அடியார் வெளியே வந்தார். வெளிச் சுவரில் எழுதப் பட்டிருந்தவை அவரின் ஆச்சரியத்தை வளர்த்தன. அது மேல் வருமாறு:

**"பெயர் பித்தன் அடிமை**
**ஊர் உலகவெளி"**

இந்த வாசகங்களின் உட்பொருளை அந்தச் சீடர் உணர்ந்துவிட்டார். அதனை அப்படியே அழியாமல் பல காலம் வைத்திருந்தார். இது நடந்தது காங்கேசன்துறையில் என்பர்.

இந்தச் சீடருக்கு நோய் ஏற்பட்ட மறுநாளே சித்தர் தன் சீடர் வீட்டுக்கு வந்துவிட்டார். அந்தச் சீடரின் நெஞ்சிலே தன் தாடி படும்படி இருந்தார். சித்தரின் பார்வையினால் சீடரின் நோய் மாயமாக மறைந்தது. தாடிச்சித்தர் கூத்தாடினார். "சிவ சிவ" என்று உச்சரித்தார்; மீண்டும் ஆடினார்; பாடினார். ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

"டேய் படுத்தது போதும் எழும்படா" என்றார். நோய் வாய்ப்பட்ட சீடர் எழுந்தார். தாடிச் சித்தர் நிலத்திலே விழுந்தார். நோயாளிச் சீடர் போல

அனுங்கினார். துடிதுடித்தார். இப்படி ஒரு கணம் சென்றது. திடீரெனத் தாடிச்சித்தர் எழுந்தார். இதன் உட்பொருளை மேல் வருமாறு விளக்கலாம்.

தன் சீடரின் துன்பத்தைக்கண்ட தாடிச்சித்தர் அன்பு கொண்டார். தன் அருட்பார்வை தாடி, ஆகியவை மூலம் நோயாளியின் நோயைத் தானே வாங்கிக் கொண்டார். வாங்கிய தாடிச் சித்தர் துடித்தார். அந்த நோய் பின்னர் அவர் மூலம் பூமியில் இறங்கிவிட்டது. இப்படியான விளக்கம் விஞ்ஞானிகளால் ஏற்கப்படுமோ? இது விளக்கத்திற்கு அப்பாற்பட்டது.

நிற்க, தாடிச்சித்தர் மீண்டும் பாடினார்; ஆடினார். பாடல் மேல்வருமாறு :

**"தேரை இழுப்பாய் பிள்ளாய்**
**தேர் இருப்பு வரும் பிள்ளாய்"**

இரண்டடியுடன் பாடல் நின்றுவிட்டது. சித்தர் அமைதியாக இருந்தார்.

"நல்லது சாமி. மாவை முருகன் தேரை இழுக்கின்றேன். பட்டுச்சாத்தி அருச்சனை செய்கின்றேன்" என்றார்.

"அப்படியே" என்று தாடிச்சித்தர் துள்ளிக் குதித்து ஓடிவிட்டார். தேர்த் திருவிழாவிற்குத் தாடிச்சித்தர் வந்தார். உரியமுறைப்படி சீடர் அருச்சனை எல்லாம் செய்தார். தாடிச் சித்தரும் அடியார் வீட்டில் உணவருந்திவிட்டுப் போனார்.

சில மாதங்கள் செல்ல அந்தச் சீடருக்கு நோய் வந்தது. படுத்த படுக்கையாகிவிட்டார். சிலநாட் செல்லத் தாடிச்சித்தர் வந்தார். அவரைக் கண்டதும் அந்தச் சீடர் அழுதார்.

"டேய் இனி இந்தத் தாடி எதுவும் செய்ய இயலாது" என்று சொல்லிவிட்டுத் தாடியை உருவினார்.

"சாமி நீங்கள் சொன்னபடி எதுவும் செய்ய இயலாது" என்று சொல்லிவிட்டுத் தாடியை உருவினார்.

"சாமி நீங்கள் சொன்னபடி அருச்சனை செய்தேன். தேர் இருப்பு வரும்வரையும் இழுத்தேன். சாமி, என்னை மீண்டும் நோய் பிடித்துவிட்டது என்ன செய்யலாம்? மருந்து எதுவும் தற்செய்யாதாம்" எனக்கூறி அழுதார்.

"இனி மருந்து இதுதான்" என்று சித்தர் தன்மேலில் இருந்த திருநீற்றைக் கையால் தடவி எடுத்தார். சீடரின் நெற்றியிலே பூசினார்.

"சாமி அடுத்த தேர் திருவிழாவிற்கு இருப்பேனோ தெரியாது. போன திருவிழாவில் எல்லாம் செய்தேன். கந்தன் என்னைக் கைவிட்டுவிட்டான். என்னசாமி, நீங்கள் சொன்னபடியே தேரை இழுத் தேன்" இப்படிச் சொல்லவோ சீடருக்கு மூச்சு வாங்கியது. தாடிச்சித்தர் சிரித்தார்.

"அப்பனே நான் அப்போதே சொல்லி விட்டேன் நல்லாகக்கேள்" என்றார்.

"நல்லது சாமி சொல்லுங்கள் கேட் கின்றேன்" என்றார் சீடர்.

"தேரை இழும்பிள்ளாய். எம்பெரு மான் முருகன் நேரிலே வீற்றிருந்து காட்சி

தருகின்றான். உன் போன்ற முருகனடி யார் தேர்வடத்தைத் தொட்டு முருகன் வீற்றிருக்கின்ற தேரை இழுக்க வேண்டும். அப்போது நீ செய்த பாவம் யாவும் நீங்கும் என்பர். இது உனக்குத் தெரி யாதோ? எமது உயிர் எமது உடலாகிய தேரிலே இருக்கின்றது. உடல் இயங்க உயிர் வேண்டும். உடலாகிய தேரை நீ இழுத்துக் கொண்டு வருகின்றாய். இப்போது உனக்கு இழைப்பு, முட்டு, மூச்சு ஆகவே நீ தேரைப் போல மூச்சு இழுக்கின்றாய். மண்ணிலே மறைந்து வாழ்கின்ற தேரையை நீ காணவில்லையா? தேரை போல உனக்கு மூச்சு இழுக்கும். உன் உடலாகிய தேர் இருப்பிற்கு வரும். அதாவது நீ மறைந்து போவாய். இதனைத்தான் நான் அன்று சொன்னேன்" என்றார்.

"தேரை இழுப்பாய் பிள்ளாய்" என்றது நீ தேரையைப் போல இழுப்பாய். அதாவது மூச்சு இழுப்பாய். மறு பொருள் தேர்-ஐ இழுப்பாய் அதாவது சுவாமி வலம் வருகின்ற தேரை வடம்பிடித்து இழுப்பாய். இதனைக் கேட்ட அந்தச் சீடர் தன் எஞ்சிய சில நாட்களைத் திருப்புகழ் படித்துக் கொண்டு கழித்தார்.

**நீ இந்த உலகிற்கு வந்துள்ளாய். ஓர் அடையாளத்தை விட்டுச் செல். இல்லையென்றால் உனக்கும் இந்த மரங்களுக்கும் கற்களுக்கும் என்ன வித்தியாசம்....? அவையும் தோன்றுகின்றன, வாழ்கின்றன, சாகின்றன. அதுபோல் பிறந்து சாவதற்கு மனிதனானவன் விரும்புவானா என்ன? "உங்கள் ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற சக்தி இருக்கின்றது. அதனை எழுப்புங்கள் என்று முழங்கு. நான் எந்த வேலைகளில் ஈடுபட்டி ருக்கிறேனோ அந்த வேலைகளில் உன்னையும் அர்ப்பணம் செய்"**

**– சுவாமி விவேகானந்தர்**

# தமிழ் அகராதி தந்த சதாவதானி புலோலி நா. கதிரவேற்பிள்ளை

பேராசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

தமிழ்மொழியின் காவலர்களாய் பலர் கடந்த காலங்களிலே அரும்பணி செய்துள்ளனர். ஒரு மொழியிலே நிறைந்த பயிற்சி தேவையாயின் அம் மொழியிலே உள்ள அகராதிகளின் அறிவு இன்றியமையாததாகும். தமிழ் மொழியிலே பயிற்சிபெற விரும்பும் பிற நாட்டவர்கள் தமிழகராதிகளை உருவாக்கினர். மேனாட்டார் வருகைக்கு முன்னரே பல நிகண்டுகள் தோன்றியிருந்தன. மொழிப் புலமையும் தேர்ச்சியும் பெறுவதற்கு அக்காலத்தில் நிகண்டுகளே உதவின. ஆனால் எல்லாவற்றையும் செய்யுள் வடிவத்திலே எழுதுகின்ற முற்காலத்தில் தோன்றிய நிகண்டுகளும் செய்யுள் வடி வத்திலேயே எழுதப்பட்டன. மேனாட்டார் கல்விமுறையிலே மனப் பதிவு செய்யும் வழக்கம் அருகிக் காணப் பட்டமையால் உரைநடை நிலையில் விளக்கம் தேவைப்பட்டது. அத்தேவையை நிறைவு செய்யப் பல அகராதிகள் எழுந்தன. 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளிலே தோன்றிய அகராதி களில் பல பிறமொழி பேசுவோர் தமிழைக் கற்பதற்காகப் பயன்படும் அகராதி களாகத் தோன்றின.

## அகராதிப் பணியும் சூழலும்

தமிழறிஞர்களும் அகராதிகளை உருவாக்க முயன்றபோது முதற்றமிழ் அகராதியாக மானிப்பாய் அகராதி 1842-ல் வெளிவந்தது. அடுத்து 1899இல் மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளையால் தொகுக்கப்பட்ட தமிழ்ப் பேரகராதி சென்னை வியத்யாரத்நாகரம் அச்சுக் கூடத்திலே பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதனுடைய இரண்டாவது பதிப்பும் 1901இல் வெளிவந்தது. மானிப்பாய் அகராதி யாழ்ப்பாண அகராதி என்றும் மனுவல் தமிழ் அகராதி என்றும் அழைக்கப்பட்டது. எனவே தமிழ் மொழியகராதி என அனை வரும் விளங்கிக் கொள்ளும் வகையிலே முதலில் வெளியிடப்பட்ட அகராதி நா. கதிரைவேற்பிள்ளை தொகுத்து வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியாகும். இதற்குப் பின்னரே தமிழ் என்ற பெயருடன் பல அகராதிகள் பலராலும் வெளியிடப்பட்டுள்ளன.

1. தமிழ்ச்சொல்லகராதி : சி.டபிள்யூ கதிரைவேற்பிள்ளை (1904).
2. தமிழ்ப் பேரகராதி : த. குப்புசாமி நாயுடு (1906)
3. இராமநாதன் தமிழ் அகராதி : பி. இராமநாதன் (1939)
4. காரனேவின் தமிழ் அகராதி : நாகலிங்க முதலியார் (1911)
5. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி (1929 - 1939)
6. மதுரைத் தமிழ்ப் பேரகராதி : கோபால கிருஷ்ணகோன் வெளியிட்டது (1937)
7. சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி : ஞானப்பிரகாச சுவாமிகள் (1939 - 46)

தமிழ்மொழியைக் கற்பதற்குத் தமிழர்களே அகராதியைப்

பயன்படுத்தவேண்டிய காலகட்டத்தில் நா.கதிரைவேற்பிள்ள்ளையின் தமிழ்ப் பேரகராதி வெளிவந்துள்ளது. இதனைத் தொகுத்து வெளியிட்ட ஆசிரியரின் தமிழ்ப்பணி தமிழர் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொன்றாகும். அவருடைய தமிழ்மொழிப் புலமையும் வடமொழிப் புலமையும் அகராதித் தொகுப்புக்கு உதவி யாக இருந்தன. இருபதாம் நூற்றாண்டிலே உரைநடைத் தமிழ் வளர்ச்சிபெற்று வந்தபோதும் தமிழ்மக்கள் அனைவரும் தமிழை நன்கறிந்தவராக இருக்கவில்லை யென்றே கூறவேண்டும். இதற்கு முக்கிய காரணம் புதிதாக மக்கள் மத்தியிலே வேகமாகப் பரவிக்கொண்டிருந்த ஆங்கில மொழிக் கல்வியாகும். ஆங்கில மொழிக் கல்வியை நமது நாட்டிலே சமயம் பரப்பு வதற்காக வந்த மேனாட்டார் தமிழ் மக்களுக்கு வேலைவாய்ப்பும் சமூக மதிப்பும் பெறமுடியும் என்ற நம்பிக்கை மக்களிடையே பரவத் தொடங்கியது. மதம் பரப்ப வந்த கிறிஸ்தவர்களும் பல பாடசாலை களையமைத்து ஆங்கிலக் கல்வியறிவைப் பரப்பும் முகமாகத் தமது சமயத்தையும் மக்களிடையே பரப்ப லாயினர். ஈழநாட்டில் தமிழ்மொழியும் தமிழர் சமயமும் இதனால் கீழ்நிலை யடையலாயின. இவ்வேளையிலே ஆறு முகநாவலர் தோன்றினார். தமிழ் மொழியையும் தமிழர் சமயத்தையும் காக்கும் பணியிலே ஈடுபட்டார். அவர் வழி வந்தவர்களில் நா.கதிரைவேற்பிள்ளை யும் ஒருவர். ஈழநாட்டில் மட்டுமன்றித் தமிழ்ப் பணியைத் தென்னிந்தியாவிலும் செய்து புகழ்பெற்றவர். அவருடைய அகராதித் தொகுப்புக்குப் பின்புலமாய அமைந்த வாழ்க்கைச் சூழல் ஆராயப்பட வேண்டியது. ஏனெனில் இன்று நா.கதிரை வேற்பிள்ளையின் தமிழ்ப்பணி இந்தியா வில் மறைக்கப்பட்டு வருகின்றது. தமிழ்ப் பேரகராதி தந்த அவர் புலமையும் ஆளுமையும் அவர் வாழ்ந்த காலத்தில் பலராலும் அறியப்பட்டிருந்தன.

## தமிழ்ப்புலமையும் ஆளுமையும்

தமிழ்ப்பேரகராதி தந்த கதிரைவேற் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு பற்றி இன்று விரிவான செய்திகள் அடங்கிய நூல் எதுவும் இல்லை. அவரது மாணவ ராகிய திரு.வி.க., நா.கதிரைவேற்பிள்ளை யின் மறைவுக்குப் (1907) பின் அவருடைய வரலாற்றைச் சிறு நூலாக எழுதி 1908ல் வெளியிட்டுள்ளார். திரு.வி.க.எழுதிய முதல் நூலாக அது அமைந்தமையால் விரிவான நூலாக அமையவில்லை. எனினும் தனது தமிழார் வத்திற்குக் காரணமாகச் சதாவதானி இருந்தார் என்பதை அந்நூலில் குறிப்பிடத் தவறவில்லை. நூலில் திரு.வி.க. பயன் படுத்தியுள்ள தமிழ்நடையும் இதற்குச் சான்றாயுள்ளது. கதிரைவேற்பிள்ளை யினுடைய தென்னகத்து வாழ்க்கை பற்றிய குறிப்புகள் பலருடைய எழுத்துக் களிலே காணப்படு கின்றன.

அவை யாவுமே திரு.வி.க. வுடன் தொடர்புகொண்டிருந்த நிலைபற்றிக் குறிப்பிடுகின்றன. ஆனால் சதாவதானி யைத் திரு.வி.க.வின் வாழ்க்கை யிலிருந்து தள்ளிவைக்கமுடியாத நிலையிலே வரலாறு அமைந்திருந்ததை நன்கு உணர்ந்திருந்தபோதும் கருத்து நிலையிலே திரு.வி.க.வின் உருவாக்கத் திற்குச் சதாவதானி எவ்வாறு ஏதுவாக இருந்தார் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டத் தயங்கிய எழுத்துக்களாகவே

உள்ளன. ஈழநாட்டு அறிஞரான சதாவதானி தென்னகத்திலே தமது புலமையாலும் தமிழாற்றலாலும் நாவலரது வழிநின்று தொண்டு செய்தவர் இராமலிங்க வள்ளலாருடைய பாடல்கள் மருட்பா என நாவலர் கூறிய கருத்தை ஏற்றவர். அக்கருத்தை நிலை நிறுத்தப் பல சொற்களங்கள் கண்டவர் சதாவதானி மீது வள்ளலாருடைய பாடல்கள் அருட்பாக்களென நிறுவ வழக்கும் தொடுக்கப்பட்டு நடந்தது. அந்த வழக்குத் தமிழ் நாட்டிலே அக்காலத்தில் பெரிதும் மக்கள் மனத்திலே சதாவதானி பற்றியிருந்த கருத்தை வெளிப்படுத்தும் ஆவணமாக இருந்தது. சதாவதானியுடைய தமிழாற்றலையும், சதாவதான ஆற்றலையும் அவரிடம் மாணாக்கராய் இருந்த திரு.வி.க. நன்கறிந் திருந்தமையால் அது பற்றித் தமது நூலிலே ஆவணப்படுத்த விரும்பினார். தாமெழுதிய சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ. நா.கதிரைவேற் பிள்ளையவர்கள் சரித்திரம் என்ற நூலிலே சதாவதானஞ் செய்த மாட்சி எனக் குறிப்பிட்டு அது பற்றி எழுதியுள்ளார்.

திரு.வி.க. சதாவதானம் பற்றி எழுதியவை சதாவதானத்தின் புகழை நிலைநாட்டும் எழுத்துருக்களாய் அமைந்தன. ஆனால் பின்வந்த தமிழக அறிஞர்கள் இதனை சாற்றுகின்ற முயற்சியிலே தமது கருத்துக்களை நூல்களிலே எழுதியுள்ளார் சதாவதானத்தின் புகழுக்கு இழுக்கு உண்டாக்கும் வகையிலே திரு.வி.க. பற்றி எழுதும் இடங்களிலெல்லாம் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**வாயாலும், மனத்தாலும் உடம்பினாலும் முறையே வாழ்த்தல், நினைத்தல் பணிவுடன் தொண்டாற்றல் மக்கள் தம் பெருங்கடனாகும். செப்பமுறச் செய்யும் தொண்டுகளை இறைவன் தனக்கே ஆக்குவித்துக் கொண்டனன் என்று அமைவது பிறப்பின் பெரும் பயனாகும். தித்திக்கும் திருவாசகத்தை தாம் பாடிவிட்டு ஆண்டவனே பாடுவித்தனன் என்று மாணிக்க வாசகர் பாடுகின்றார்.**

**"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்**
**பேயேனதுள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனைச்**
**சீயேனும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்**
**தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ"**

**இதனை எத்தனை முறை பாடினாலும் தகும்.**

**– நன்றி – கீதை அமுதம்**

# இப்படியும் நடந்தது

சகோதரி யதீஸ்வரி அவர்கள்

புண்ணிய தலமான காசிநகரில் ஒரு ஏழைக்குடும்பம் இருந்தது. அன்றாடக் கூலிக்கு வேலை செய்து சொற்பபணம் கொண்டுவரும் கணவன். அவன் மனம் கோணாமல் சிக்கனமாக வீட்டைக் கவனித்த மனைவி. அவர்களுக்கு ஒரு சிறு வயது மகன். அந்த வீட்டில் வறுமை இருந்தது. ஆனால்; அன்பும் பக்தியும் நல் நெறியும் கூடவே இருந்தன. இந்நிலையில் அந்த வீட்டுத்தலைவனான ஏழை மனிதன் திடீரென ஒருநாள் இறந்துபோனான். பத்தினியான அவன் மனைவி மனமுடைந்துபோனாள். பிரமை பிடித்தவள்போல இருந்தாள் அவள். அவளது சிறு பிள்ளையான சிறுவனுக்கோ இழப்பின் துயரைவிடப் பசியின் கொடுமையே அதிகமாக இருந்தது. அவன் "அம்மா பசி; அம்மா சோறு தா!" என்று இடைவிடாமல் தாயைக் கேட்டபடி அழுதுகொண்டே இருந்தான். தாயும் ஏதோ மனதில் முடிவு செய்தவளாக, "வா மகனே! உனக்கு உணவு வாங்கித் தருகிறேன்" என்று அவன் கையைப்பிடித்துக் கூட்டிச் சென்றாள். கங்கைநதிக் கரையை அடைந்ததும் "இரு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கங்கைநதியுள் மூழ்கினாள் தாய். அவள் நீண்ட நேரமாகியும் எழுந்துவரவில்லை என்று கண்ட சிறுவன் அம்மா! வா! பசிக்கிறது, சோறு வாங்கித் தா" என்று பெரிதாகச் சத்தமிட்டு அழத்தொடங்கினான். தாய் கங்கை அன்னையின் மடியில் அடைக்கலமாகிவிட்டதை அறியாமல் அழுதுகொண்டிருந்த சிறுவனைக் கண்டார் ஒரு சாது. அவர் காசியில் ஒரு வைணவ மடம் அமைத்து பெருமாளுக்குப் பணிசெய்யும் நியமம் கொண்டவர், முதியவர். இரக்கம் மிகுந்த அவர் அந்தச் சிறுவனைத் தேற்றினார். நடந்தவைகளைத் தெளிவாகச் சொல்லைக்கூடத் தெரியாத நான்கு வயதுச் சிறுவனான அவன் கையை ஆதரவுடன் பிடித்துக்கொண்டு "குழந்தாய்! அழமால் வா! உனக்குச் சாப்பாடு தருகிறேன். அம்மா வருவா" என்று சொல்லி அழைத்துச் சென்றார். மடத்தில், அவனுக்கு நல்ல உணவு கொடுத்தார். அடைக்கலம் கொடுத்தார். மடத்திலிருந்த கிருஷ்ணன் விக்கிரகத்தில் தன் தாயைக் கண்ட சிறுவன் கவலை மறந்து நித்திரை கொண்டான். நாட்கள் ஓடின. அம்மா வரவே இல்லை. நல்ல உணவு, உடை, ஆதரவு. மடத்தில் உள்ள பணியாளர், குருவின் சீடர்கள் எல்லாரும் பொழிந்த அன்பு குருவின் வாஞ்சை எல்லாம் சேர்ந்து அவனது மனத்தில் தனிமை உணர்வைப் போக்கின. நல்ல பிள்ளையாக, மடத்தின் நிகழ்வுகளின் போது மிக உன்னிப்பாகக் கவனிப்பவனாக அவன் வளர்ந்தான். நாபாஜி எனக் குரு அவனுக்குப் பெயரிட்டார்.

ஒரு நாள் மடத்துக்கு நிதி உதவி புரியும் செட்டியார் உரிய காலத்தில் வரவில்லையே எனக் குரு கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். வெளிவாசற்படியில் உட்கார்ந்திருந்த நாபாஜி எழுந்து ஓடி வந்தான். "சுவாமி! கவலைப்படாதேயுங்கோ, செட்டியாருடைய கப்பல் புயலிலே திசைமாறிப்போய் தடுமாறிக் கொண்டிருந்தது. பெருமாள் (மகாவிஷ்ணு) போய்க் கப்பலைக் காப்பாத்திக் கூட்டிட்டு வாரார்.

நாளைக்கு மறுநாள் செட்டியார் இங்கே வருவார்" என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் வெளிவாசற்படியில் உட்கார்ந்து கொண்டான்.

குருவுக்குச் சிரிப்பு வந்தது என்றாலும் பெருமாளைத் தியானித்தபடி எழுந்து தம் கடமைகளில் ஈடுபட்டார்.

இரண்டாம் நாள் மாலை செட்டியார் வந்தார். குருவை வணங்கினார். குரு சுகம் விசாரித்தார். செட்டியார் சொன்னார், வியாபாரத்துக்குப் போன நம்முடைய கப்பல் திரும்பி வரும் வழியில் வங்கக் கடலில் புயலில் சிக்கிக்கொண்டது சுவாமி! ஏதோ பகவானே வந்ததுபோல ஒரு படகில்வந்த கெட்டிக்கார மனிதர் ஒருவருடய உதவியினால் கப்பலைக் கவிழாமல் காப்பாத்தியாச்சு. புயலும் ஓய்ந்திடுச்சு. சுகமாக வந்து சேர்ந்தோம். கொஞ்சம் தாமதமாகிட்டுது. மன்னியுங்க" என்று கூறித் தாம் வழமையாக மடத்திற்கு வழங்கும் பொருட்களுடன் மேலதிகமாகவும் வழங்கி விடைபெற்றார்.

குரு திகைத்தார். நாபாஜி அன்று சொன்னது…? எப்படி இந்தச் சின்னக் குழந்தைப் பையனுக்கு இது தெரிந்தது". திகைத்த குரு சில பரீட்சைகள் சிறுவனுக்குத் தெரியாமலே விளையாட்டாகச் சோதித்துப் பார்த்தார். நாபாஜிக்கு முக்காலத்தையும் காணும் ஞானக் கண் உள்ளதை அறிந்து பெருவியப்பு அடைந்தார். அவனைத் தனது குருவைப் போல் கொண்டாடினார்.

ஒருநாள் நாபாஜியிடம் குரு சொன்னார், "நாபாஜி! நமது நாராயண பக்தர்கள் பலரது திவ்ய சரிதத்தை நாம் எதிர்காலச் சந்ததிக்குக் கொடுக்கவேண்டும். நான் பெயர்களும் குறிப்பும் சொல்கிறேன். நீ பெருமாள்கிட்டே கேட்டு, அந்த மகான்களுடைய சரிதங்களை அறிந்துசொல்லவேண்டும். அதை நான் எழுதுவேன்.

நாபாஜி மிகுந்த பணிவுடன் சொன்னான், "சுவாமி! உங்கள் ஆசியும் அருளும் கிடைத்தால் பெருமாளுடைய அருளும் கிடைக்கும். நாம் இந்தப் புண்ணிய பணியைச் செய்வோம்".

வடநாட்டில் வாழ்ந்து மறைந்த மிகச் சிறந்த வைணவ பக்தர்களான சூர்தாஸர், நாமதேவர், ஜெகதேவர், மீராபாய், சாந்தசக்குபாய் போன்றவர்களைப் பற்றி குரு கேட்கக் கேட்க, கண்ணை மூடியபடி அவர்களின் புனித சரிதங்களை மனக்கண்ணால் கண்டு இனிய கதைகளாக நாபாஜி சொல்லச் சொல்ல குரு அவற்றை எழுதினார்.

"ஸ்ரீ மகாபக்த விஜயம்" என்ற வடஇந்திய" திருத்தொண்டர்களின் சரிதங்கள் அடங்கிய புனித வைணவ நூல் உலகிற்குக் கிடைத்தது.

# தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்திலிருந்து
# 2017இல் பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவிகள்


சி. நிக்ஷனா (கலை)


ச. விமலா (கலை)


க. ஹஜனிகா (கலை)


சு. சிந்துஜா (கலை)


வே. கஜேந்தினி (கலை)


இ. சர்மிளா (கலை)


க. கலையரசி (கலை)


ர. விதுரா (கலை)

# தெல்லிப்பழை

# ஸ்ரீ காசி விநாயகர் திருக்கோவில்




Print Master. T.P. : 021 205 3322